# Annai Hajira Women's College

## Melapalayam, Tirunelveli-05

(A Unit of As-Sathiq Educational Society)

(Affiliated to Manonmaniam Sundaranar University)



# NEWSPAPER CLIPPINGS

# 2023-2024

# ULLAATCHI SAARAL – 20.07.2023



## நெல்லை: மேலப்பாளையம்

# அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் தமிழ் இலக்கிய மன்றத் தொடக்க விழா!

### "மேலாண்மை மேல் ஆளுமை" செய்வது குறித்து விளக்கம்




நெல்லை,ஜூலை.20: திருநெல்வேலி மாநகரம் மேலப் பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் தமிழ் இலக்கிய மன்றத் தொடக்கவிழா கல்லூரியின் அரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் க.ரஜப் பாத்திமா தலைமை தாங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியை முனைவர் செ.ஷப்ரீன் முனீர் அறிமுக உரையாற்றினார். கல்லூரியின் முதலாம் ஆண்டு கணினி அறிவியல் மாணவி சி.'ஹை யாஸ்மின் பாத்திமா வரவேற்றார்.

பாளையங் கோட்டை சாராள் தக்கர் பெண்கள் கல்லூரியின் தமிழ்த் துறை பேராசிரியை முனைவர் ப.அலிஸ் ராணி, "மேலாண்மை மேல் ஆளுமை" என்னும் தலைப்பில் சிறப்புரை யாற்றினார். ஆங்கிலத் துறையின் இரண்டாம் ஆண்டு மாணவி சே.அப்ரோஸ் பர்வீன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். முடிவில் கணினி அறிவியல் இரண்டாம் ஆண்டு மாணவி சே.ரகுமாள் நன்றி கூறினார்.

# DINAMALAR – 14.08.2023



■ மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் நடந்த சாலைபாதுகாப்பு விழிப்புணர்வுநிகழ்ச்சியில், வட்டாரபோக்குவரத்து அலுவலர் சந்திரசேகர், மாணவிக்கு ஹெல்மெட் பரிசு வழங்கினார்.

## மேலப்பாளையம் கல்லூரியில் சாலைபாதுகாப்பு விழிப்புணர்வு

**திருநெல்வேலி, ஆக.14–** மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

சாந்தி ஓட்டுநர் பயிற்சி பள்ளி சார்பில், சாலை பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை செய்து வருகிறது. இதன் பகுதியாக மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவிகளுக்காக "சாலை பாதுகாப்பு திறன்களை மேம்படுத்துங்கள்" என்ற தலைப்பில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடந்தது. கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக நெல்லை வட்டார போக்குவரத்து அலுவலர் சந்திரசேகரன், சாலை விதிமுறைகள் பின்பற்றுவது குறித்து பேசினார். மேலும் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய கேள்விகளை கேட்டு, சிறப்பாக பதில் அளித்த 3 மாணவிகளுக்கு ஹெல்மெட் பரிசு வழங்கினார்.

சாந்தி ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர் டொமினிக் ஆண்டனி சாலை பாதுகாப்பு பற்றி விளக்கம் அளித்தார். கல்லூரியின் என்.எஸ்.எஸ்., திட்ட அலுவலர் ராமலட்சுமி நன்றி கூறினார்.

**DINATHANTHI – 03.09.2023**



## மேலப்பாளையம் கல்லூரியில்

# நெல்லை தின விழா

இட்டமொழி, செப்.3-

நெல்லை மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் நெல்லை லைப் இயக்கம் சார்பில், நெல்லை தின விழா நடந்தது. டாக்டர் பிரேமசந்திரன் தலைமை தாங்கினார். முன்னாள் எம்.பி.யும், தி.மு.க. மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளருமான விஜிலா சத்யானந்த் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாணவ-மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி வாழ்த்தி பேசினார். எழுத்தாளர் நாறும்பூநாதன் எழுதிய 'நீர், நிலம், மனிதர்கள்' என்ற புத்தகம் வெளியிட்டதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

# DINAMALAR – 01.09.2023

தினமலர்
திருநெல்வேலி | வெள்ளி | 1.9.2023

## பாளை கல்லூரியில் சொற்பொழிவு

**திருநெல்வேலி, செப். 1–**

பாளை சாரதா கல்லூரியில் சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சி நடந்தது.

பாளை சாரதா மகளிர் கல்லூரியில் வேதியியல் துறை சார்பில் சிறப்பு சொற்பொழிவு நிகழ்ச்சி நடந்தது. கல்லூரி செயலர் சரவணபவப்ரியா அம்பா ஆசி வழங்கினார். இயக்குனர் சந்திரசேகர் வாழ்த்தி பேசினார். முதல்வர் கமலா தலைமை வகித்தார். அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி வேதியியல் துறை தலைவர் அனுராதா, வேதியியல் துறையில் ஆராய்ச்சி வாய்ப்புகள் குறித்து பேசினார். மாணவிகள், பேராசிரியைகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ULLAATCHI SAARAL – 16.11.2023

## மேலப்பாளையம்

# மவுலானா அபுல் கலாம் ஆசாத் கல்விக்குழு சார்பில் அன்னை ஹாஜிரா கல்லூரியில் தேசிய கல்வி தின விழா



நெல்லை, நவ.16: திருநெல்வேலி மாநகரம் மேலப் பாளையம் மௌலானா அபுல் கலாம் ஆசாத் காங்கிரஸ் கிராம கல்விக்குழு சார்பில், அப்துல் கலாம் ஆசாத்தின் 135ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மேலப் பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் "தேசிய கல்வி தின விழா" கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியின் தலைவர் இன்ஜினியர் எஸ்.கே. செய்யது அகமது தலைமை தாங்கினார். கல்லூரியின் தாளாளர் பொறியாளர் எஸ்.கே.குதா முகம்மது, கல்லூரியின் பொருளாளர் ஹாஜி ஓ.கே. ஜாபர் சாதிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அன்னை ஹாஜிரா கல்லூரியின் முதல்வர் டாக்டர் கே.ரஜப் பாத்திமா வரவேற்றார்.

மேலப்பாளையம் மௌலானா அபுல் கலாம் ஆசாத் காங்கிரஸ் கிராம கல்விக்குழுவின் நிறுவனத் தலைவரும், முன்னாள் மாமன்ற உறுப்பினருமான காளை ரசூல் மைதீன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கல்லூரியில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினார். நிகழ்ச்சியில் அபுல் கலாம் ஆசாத் கல்விக்குழுவின் ஆலோசகர்கள் சுல்தான் காஜா, கவிஞர் கராமத்துல்லா, கௌரவ ஆலோசகர் ஏ.முகம்மது யூசுப் மற்றும் கல்லூரியின் பேராசிரியைகள், அலுவலக மேலாளர் காஜா, மாணவிகள், அலுவலக ஊழியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியை முனைவர் த.இராமலெட்சுமி நன்றி கூறினார்.

மேலும் மேலப் பாளையம் மௌலானா அபுல் கலாம் ஆசாத் காங்கிரஸ் கிராம கல்விக்குழுவில் சார்பில் மேலப் பாளையம் காயிதே மில்லத் மேல்நிலைப் பள்ளி, குறிச்சி புனித தோமையார் உயர்நிலைப்பள்ளி, முஸ்லிம் மேல்நிலைப் பள்ளி, ஆமீன்புரம் ரஹ்மானியா மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றிலும் தேசிய கல்வி தின விழா கொண்டாடப்பட்டது.